www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## முதல் திருப்புதல் தேர்வு - 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## விலங்கியல்

நேரம் : 3.00 மணி | பகுதி - அ | மதிப்பெண்கள் : 70

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

1. எவ்வகை கன்னி இனப்பெருக்கத்தில் பெண் உயிரிகள் மட்டுமே உருவாகின்றன?
   அ) அர்ரீனோடோகி ஆ) தெலிடோக்கி இ) ஆம்பிடோக்கி ஈ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்
2. குழந்தை பிறப்புக்குப் பின் பால் சுரத்தலை தொடங்கி வைப்பதும் தொடர்ச்சியாக சுரக்க வைக்கவும் உதவும் முக்கிய ஹார்மோன்
   அ) ஈஸ்ட்ரோஜன் ஆ) FSH இ) புரோலாக்டின் ஈ) ஆக்சிடோசின்
3. கீழ் உள்ள குழுக்களுள் பாக்டீரிய பால்வினை நோய்க்குழுவைக் குறிப்பிடுக.
   அ) கிரந்தி, வெட்டை நோய் மற்றும் கேன்டிடியாசிஸ்
   ஆ) கிரந்தி, கிளாமிடியாசிஸ் மற்றும் வெட்டை நோய்
   இ) கிரந்தி, வெட்டை நோய் மற்றும் டிரைகோமோனியாசிஸ்
   ஈ) கிரந்தி, டிரைகோமோனியாசிஸ் மற்றும் பெடிகுலோசிஸ்
4. கிளைன்பெல்டர் சிண்ட்ரோம் தொகுப்பு வரைபடம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?
   அ) xyy ஆ) xo இ) xxx ஈ) xxy
5. மனித மரபணுத் தொகுதியில் உள்ள மொத்த நைட்ரஜன் காரஸ்களின் எண்ணிக்கை சுமார்
   அ) 3.5 மில்லியன் ஆ) 35,000 இ) 35 மில்லியன் ஈ) 3.1 பில்லியன்
6. நவீன மனித இனம் எந்த காலத்தைச் சேர்ந்தது?
   அ) குவார்டர்னரி ஆ) கிரிட்டேசியஸ் இ) சைலூரியன் ஈ) கேம்ப்பிரியன்
7. கீழ்க்கண்ட எந்த நோய் நீர்த்திவலைகள் மூலம் பரவுகிறது?
   அ) துலாரெமியா ஆ) லிஸ்டெரியோசிஸ் இ) சின்னம்மை ஈ) புட்டாலம்மை
8. டாட்டூரா தாவரத்திலிருந்து உருவாக்கப்படும் போதை மருந்து
   அ) மன மருட்சியை ஏற்படுத்துபவை ஆ) சோர்வூட்டி இ) கிளர்வூட்டி ஈ) வலி நீக்கி
9. எய்ட்ஸ் வைரஸில் காணப்படுவது
   அ) ஒற்றை இழை ஆர்.என்.ஏ ஆ) இரட்டை இழை ஆர்.என்.ஏ
   இ) ஒற்றை இழை டி.என்.ஏ ஈ) இரட்டை இழை டி.என்.ஏ
10. வடிசாலைகளில் எத்தனால் உற்பத்திக்கு பயன்படும் பொதுவான தளப்பொருள்
    அ) சோயா மாவு ஆ) நிலக்கடலை இ) கரும்பாலை கழிவுகள் ஈ) சோள உணவு
11. ELISA முதன்மையாக இதற்கு பயன்படுகிறது
    அ) திடீர் மாற்றங்களை கண்டறிய
    ஆ) நோய்க்கிருமிகளை கண்டறிய
    இ) விரும்பத்தக்க பண்புகளை உடைய விலங்குகளை தேர்வு செய்ய
    ஈ) விரும்பத்தக்க பண்புகளை உடைய தாவரங்களை தேர்வு செய்ய
12. வெப்பநிலையில் ஏற்படும் மாறுபாடுகளை தாங்கி வாழும் விலங்குகள் இவ்வாறு அழைக்கப்படும்
    அ) எக்டோதெர்ம்கள் ஆ) மிகை வெப்ப வேறுபாட்டு உயிரிகள்
    இ) எண்டோதெர்ம்கள் ஈ) ஸ்டீனோதெர்ம்கள்
13. சிற்றினங்களுக்கிடையே போட்டி காரணமாக ஏற்படுவது
    அ) உயிரின மறைவு ஆ) திடீர் மாற்றம் இ) தொந்தரவு வாழ்க்கை ஈ) கூட்டுயிரி வாழ்க்கை
14. உயிரினங்களின் சிவப்பு பட்டியலை வெளியிட்டுள்ள நிறுவனம்
    அ) WWF ஆ) IUCN இ) ZSI ஈ) UNEP

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



15. பின்வருவனவற்றில் எது உணவுச்சங்கிலிகளின் ஊட்ட நிலைகளைக் கடக்கும் போது எப்போதும் குறைகின்றது?
அ) எண்ணிக்கை ஆ) வேதிப்பொருள் இ) ஆற்றல் ஈ) விசை

பகுதி - ஆ

II. எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 24 கட்டாய வினா) 6 x 2 = 12

16. இரு பிளவுறுதல் முறைப்படி இனப்பெருக்கம் செய்யும் ஒரு செல் உயிரிகள் அழிவற்றவை. நியாயப்படுத்துக.
17. இன்ஹிபின் என்றால் என்ன? அதன் பணிகள் யாவை?
18. விரிவாக்கம் தருக : a) ZIFT b) ICSI
19. டவுன் சிண்ட்ரோமின் அறிகுறிகளைக் குறிப்பிடுக.
20. வேறுபடுத்துக : வார்ப்புரு இழை மற்றும் குறியீட்டு இழை
21. மனித இனத்தின் பரிணாம தோற்றத்தின் நிலைகளை கீழ்நோக்கு வரிசையில் வரிசைப்படுத்துக.
22. இன்டர்பெரான்கள் என்றால் என்ன? அதன் பங்கினைக் கூறுக.
23. பால் எவ்வாறு தயிராக மாற்றப்படுகிறது? தயிர் உருவாகும் முறையினை விளக்குக.
24. செந்தரவுப் புத்தகம் - இதைப் பற்றி உனக்கு தெரிவதென்ன?

பகுதி - இ

III. எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 33 கட்டாய வினா) 6 x 3 = 18

25. ஸ்பர்மடோஜெனிசிஸ் மற்றும் ஸ்பர்மியோஜெனிசிஸ் - வேறுபடுத்துக.
26. கருக்கொலை மற்றும் சிசுக்கொலை - வேறுபடுத்துக.
27. DNA மற்றும் RNA ஆகியவற்றுக்கிடையே உள்ள அமைப்பு சார்ந்த வேறுபாடுகள் மூன்றினை குறிப்பிடுக.
28. லாமார்க்கின் பெறப்பட்ட பண்புக் கோட்பாட்டினை தவறென நிரூபித்தவர் யார்? எவ்வாறு நிரூபித்தார்?
29. சாதாரண சளிக்கு எதிராக தடுப்பு மருந்தை உற்பத்தி செய்ய முடியாதது பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
30. வரையறு : அ) உயிர் எதிர்ப்பொருள் ஆ) சைமாலஜி இ) சூப்பர் பக்
31. DNA தடுப்பூசிகள் என்பன யாவை?
32. பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதம் என்றால் என்ன?
33. பனிப்புகை என்றால் என்ன? அது நமக்கு எந்த வகையில் திங்களிக்கிறது?

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25

34. அ) மனித விந்துசெல் உருவாக்கம் மற்றும் அண்ட செல் உருவாக்கம் நிகழ்வுகளை வரைபடம் மூலம் விளக்குக.

*(அல்லது)*

ஆ) குரோமோசோம் தொகுப்பு வரைபடத்தின் பயன்களை எழுதுக.

35. அ) கடத்து RNA இணைப்பு மூலக்கூறு என ஏன் அழைக்கப்படுகிறது?

*(அல்லது)*

ஆ) டார்வினிய கோட்பாடுகளுக்கான முக்கிய எதிர்க் கருத்துகள் யாவை?

36. அ) இம்யுனோகுளோபுலின் அமைப்பை தகுந்த படத்துடன் விவரி. *(அல்லது)*
ஆ) குறிப்பு எழுதுக :
i) புரூயரின் ஈஸ்ட் ii) இடியோனெல்லா சாக்கியன்சிஸ் iii) நுண்ணுயிரிய எரிபோருள் கலன்கள்

37. அ) நகலாக்கத்தில் சாதக பாதகங்களைக் குறிப்பிடுக. *(அல்லது)*
ஆ) இருவேறு சிற்றின விலங்குகளுக்கிடையேயான சார்புகளை அட்டவணைப்படுத்துக.

38. அ) உயிரிய பல்வகைத் தன்மையின் இழப்பிற்கான பல்வேறு காரணங்களை பட்டியலிடுக.

*(அல்லது)*

ஆ) குறிப்பு வரைக : i) மிகை உணவூட்டம் ii) பாசிப் பெருக்கம்

********

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com